

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2054 | ஜனவரி 26, 2023 | புரட்சி 22 | முழக்கம் 012 | விலை: ரூ.3.00

# கருநாடகத்தில் ‘திராவிட சங்கம்’ உதயம்

அரங்கின் மேடையில் நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருந்தவர் ‘கன்னடம்’ ‘கன்னடம்’ என்று முழக்கமிட அரங்கில் இருந்தவர்கள் ‘திராவிடம்’ ‘திராவிடம்’ என்று முழங்கினார்கள். அதேபோல மேடையில் இருந்தவர் ‘திராவிடம்’ ‘திராவிடம்’ என்று முழக்கமிட அரங்கில் இருந்தவர்கள் ‘கன்னடம்’ ‘கன்னடம்’ என்று முழங்கினார்கள். அரங்கில் இருந்த எனக்கு “சென்னை கலைவாணர்” அரங்கில் இருக்கின்றோமா எனும் எண்ண ஓட்டங்கள். ஆனால் இந்த முழக்கங்களை வரலாற்றுப் பதிவாக மாற்றியது கொண்டஜ்ஜி பசப்பா அரங்கமாகும்.

பெங்களூரின் மையப்பகுதியில் இருந்தது அரங்கம். கருநாடகத்தின் சட்டமன்றமான ‘விதான சௌதாவிற்கு’ கூப்பிடும் தூரத்தில்தான் அந்த அரங்கம் இருந்தது.

மேடையில் அமைக்கப்பட்டிருந்த திரையில் ஒளிவெள்ளத்தில் கருநாடகத்தின் நிலவியலைக் கண்முன் நிறுத்தும் வண்ணமயமான காட்சிகள்; பசுமையான காடுகள், மலைத் தொடர்கள், நீர் வீழ்ச்சிகள், தங்களின் அடையாளம் உயிர் பெற்றதைப் போல பாடிக்கொண்டிருந்தன. அந்த பாடல்களின் உட்பொருளாக - RDS எனும் எழுத்துகள் மக்களுடன் உறவாட துடித்துக் கொண்டிருந்தன. ஆம்! அதுதான் “ராஷ்ட்ரிய திராவிட சங்கம்” - RDS ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் அரங்கத்தில் இருந்தனர். அதேயளவு மக்கள் அரங்கின் வெளியே வைக்கப்பட்டிருந்த டிஜிடல் திரைகளில் நிகழ்ச்சியைப் பார்த்தனர். பங்கேற்றோர் மனங்களில் புதியதோர் எழுச்சியைக் காண முடிந்தது.

ராஷ்ட்ரிய திராவிட சங்கம் நடைபோடவிருக்கும் பாதையையும் அந்தப் பாதையை மறைத்திருந்த தடைகளையும், அந்தப் பாதையில் நடக்கத் தொடங்கியிருப்போரின் ஆற்றலையும், சிந்தனையாளரும் எழுத்தாளருமான பஞ்ஜகெரெ ஜெயபிரகாஷ் சங்கத்தின் திசைவழி உரையில் முன் வைத்ததைப் பகிர்ந்துகொள்வோம்.

“இந்திய மண்ணின் பூர்வகுடிகள் திராவிடர்கள், ஆதிவாசி சமுதாயங்களாக, பன்முகக் கலாச்சார பண்பாடுகளைக் கொண்டிருந்தனர். மொழிக் குடும்பங்களின் அடையாளங்கள் திராவிடர்களின் சிறப்பான கூறுகளாகும். ஆயிரமாயிரம் ஆண்டுகளின் சமூக வரலாற்றைக் கொண்டிருக்கும் திராவிட சமுதாயங்கள் தங்களுக்குள் மக்களாட்சியைக் கொண்டிருந்தனர். திராவிடர்களில் பிறப்பால் மேல் கீழ் எனும் வேறுபாடுகள் இருக்கவில்லை.

இந்திய நாட்டின் பூர்வகுடிகள் திராவிடர்கள். சிந்துநதி நாகரிகம் நம்முடைய நாகரிகம். சிந்து

**ச. சிவலிங்கம்**
**தலைவர், சுயமரியாதை தலித் சக்தி**

நாகரிகத்திற்கு 5,000 ஆண்டுகளின் வரலாறு இருக்கின்றது. சிந்து நாகரிகத்தின் சமூகப் பண்பாட்டு அம்சங்களை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அன்றய உலக நாகரிகங்களுடன் தொடர்பு கொண்டிருந்த நாகரிகம் நமது நாகரிகம். அதில் சாதிமுறை இருந்ததற்கான எவ்வித சான்றும் இல்லை என்பது பற்றி உறுதியான முடிவுகள் இல்லை. எனவே இந்தியா நம் அனைவருக்குமான நிலமாகும். பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த கன்னட கவிஞர் பம்பன் “மனுஜகுலம் தானொந்தே வலம்” (மனிதர்கள் அனைவரும் ஒரே குலம்) என்று கூறினார். கன்னட கவி பம்பன் முதல் இன்றைய எழுத்தாளர் தேவனூர் மஹாதேவா வரை அனைவரும் மனிதகுலத்தை உயர்த்திப் பாடியுள்ளனர். ஆரியர்களின் வருகைக்குப் பின்தான் மேல் கீழ் எனும் பாகுபாடு ஏற்பட்டது. புத்தர் வளர்த்த உயிர்களின்பால் கருணை, மக்களிடையே அன்பு, சகோதர உணர்வு முதலியவற்றை ஆரியர்கள் உருவாக்கிய சாதி, வர்ணாசிரம அமைப்புமுறை - அழித்து வருகின்றது. ஆரியர்களின் பண்பாட்டு ஒடுக்குமுறை கடந்த 2000 வருடங்களாக திராவிடர்களின் எல்லா அடையாளங்களையும் சிறிது சிறிதாக அழித்து வருகிறது. இப்பொழுது அரசியல் அதிகாரமும் இருப்பதால் உச்சகட்டமாக நமது பன்முகப் பண்பாட்டை அழித்து நம்மை ஒரே பண்பாட்டிற்குள் அடைக்க முயற்சிப்பதை நாம் சகித்துக் கொள்ள முடியாது. நம்மை மவுனப் பண்பாட்டிற்குள் அடைக்கப் பார்க்கின்றார்கள். அவர்கள் சொல்வதையெல்லாம் மவுனமாக ஒப்புக் கொண்டு வாழ வேண்டும் என எதிர்பார்க்கின்றார்கள்.

திராவிடர்களின் பன்முகப் பண்பாட்டு அடையாளங்களைக் காப்பாற்றுவதற்காக இந்தியா நம் அனைவரின் பூமி எனும் விழிப்புணர்வை வளர்த்திட நாம் அமைப்பாக செயல்பட வேண்டியத் தேவை ஏற்பட்டுள்ளது. அந்த வரலாற்று சிறப்புமிக்க பணியை “ராஷ்ட்ரிய திராவிட சங்கம் - RDS ஆற்றும்” என பஞ்ஜகெரெ ஜெயப்ரகாஷ் தனது உரையில் வலியுறுத்திக் கூறினார்.

இவ்விழாவில் கன்னட திரையுலக எழுத்தாளர் கவிராஜ் அவர்கள் தமது கருத்துகளைப் பதிவு செய்தார். அவர் கூறிய கருத்துகள் - “இந்தியாவின் ஆதிகுடிகளான திராவிடர்கள் மீது ஆரியர்கள் சகிப்புதன்மை அற்றவர்களாக இருக்கின்றாகள். அதன் காரணமாகத் திராவிடர்களைக் கீழானவர்கள் என எண்ணி நடத்தி வருகின்றனர். நமது மொழிகள், பண்பாடுகளின் மீது தீவிரமான ஒடுக்குமுறைகளை நடத்தி வருகின்றனர்.

ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே பண்பாடு எனும் பெயரில் திராவிடர்களின் பன்முகப் பண்பாட்டு அடையாளங்களையும், மொழிகளையும் வேரடி மண்ணோடு அழிக்கும் செயலில் ஈடுபட்டு வருகின்றனர். இத்தகைய சமயத்தில் திராவிட மொழிகள் பண்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதுடன் ஆரியத்தை நிராகரிப்போம் என்று முழங்கினார். நமது பாராளுமன்ற உறுபினர்கள் அனைவரும் வீரமற்றவர்களாக இருகின்றனர். நந்தினி (பால் உற்பத்தி குழுமம்) குழுமத்தை அழிக்க நினைக்கின்றார்கள். நமது மக்கள் பிரதிநிதிகள் வட இந்தியர்களின் அடிமைகளாக இருக்கின்றனர் என்று தமது ஆக்ரோஷத்தை வெளிபடுத்தினார். மேலும், ‘திராவிடர் என்றால் தென்னிந்தியாவைச் சேர்த்தவர்கள் ஒரே சாதி, ஒரே மொழிக் குடும்பத்தைச் சார்தவர்கள். ஆரியர்களின் படையெடுப்பால் திராவிடர்கள் சிதறியிருப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. இத்தகைய சூழ்நிலையில் திராவிடர்கள் ஏன் ஒன்றுபட வேண்டும் என்றும் கேள்வி எழக்கூடும். மேல்வர்க்கத்தினரான ஆரியர்கள், திராவிடர்களைக் கீழானவர்கள் எனக் கூறி அவர்கள் மீது குரூரமான தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். மேலும் உழைக்கும் மக்களின் உணர்வுகளை கீழானதாக நிலை நிறுத்தி வருகின்றனர். அரசியல் ரீதியாக, சமூகரீதியாக, பொருளாதார ரீதியாக, திராவிடர்கள் மீது ஆரியர்களின் தாக்குதல்கள் அதிகமாகிக்கொண்டு வருகிறது. கன்னட இலக்கிய உலகின் இலக்கியவாதி ஒருவர், சமஸ்கிருத மொழியைப் புகழ்ந்து பேசுவதுடன் மட்டுமல்லாமல் சமஸ்கிருத மொழியிலிருந்து அ திகமான சொற்களைக் கன்னட மொழி ‘இரவல்’ பெற்றுள்ளது என்று கூறுகின்றார். அவருக்கு கன்னட மொழியின் வரலாறே தெரியவில்லை.

தமிழ்நாட்டில் மக்கள் திராவிட அடையாளத்தை காப்பாற்றி வருகின்றனர். அவர்களைப் போல நமது அடையாளங்களைக் காப்பற்றிக் கொள்ளாமல் எவ்வளவு வளர்ச்சியை அடைந்தாலும் அதனால் பயனில்லை என்று கூறினார். இந்த மாநாட்டில் உரையாற்றிய கன்னட போரட்டக்காராரும் பத்திரிகை யாளருமான ஜானகெரெ வெங்கட் ராமய்யா கூறிய கருத்துகள்.

பெரியார் அவர்களின் சிந்தனை வழியே நமது வழி. பெரியார் கருநாடகத்தைச் சேர்ந்தவர் என்பது கூடுதல் பெருமையாகும். நமக்கு விழிப்புணர்வு ஊட்டியவர்கள் யாராவது இருப்பார்களென்றால் அவர்கள்

(4ஆம் பக்கம்)

# ‘அம்மா’ பெயரில் அரசியல் சரணாகதி

ஈரோடு இடைத் தேர்தல் வந்தாலும் வந்துச்சி; அக்கிரகார (அல்லது மயிலாப்பூர் ஆடிட்டர்) தி.மு.க. எனும் அதிமுக முகத்திரை கிழிஞ்சு தொங்குது என்றார் ஒரு நண்பர்.

“நான் ஒப்புக் கொள்ள மாட்டேன்; முகத்திரை ஒன்றை மாட்டிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. அவர்களுக்கு அவ்வளவு வீரம். பல ஆண்டுகாலம் ஒன்றாகப் பயணித்த சொந்தக் கட்சிக்காரர்களிடம் முண்டாவைத் தூக்கி கட்டிப் புரண்டு திருப்பி திருப்பி அடிப்பார்கள். தூக்கிப் போட்டு மிதிப்பார்கள். ஆனால் பா.ஜ.க. என்று வந்து விட்டால் அவ்வளவு தான்! நீ யார்ரா, முதலில் போய் பா.ஜ.க.வைக் காலைப் பிடிப்பது? எனக்கில்லாத உரிமை உனக்கு வந்து விட்டதா? என்று மீண்டும் யுத்தக் களத்தில் வீரத்துடன் இறங்குவார்கள்.

‘அமைதிப் படை’ படத்தில் சத்யராஜ் ஆடையைக் துவைப்பதில் தனது சீனியாரிட்டி உரிமையை விட்டுக் கொடுக்காமல் மணிவண்ணன் போராடும் வீரம்செறிந்த காட்சி நினைவுக்கு வந்தால் நாம் பொறுப்பு அல்ல.

பா.ஜ.க.வின் ‘புனிதத்தலமான’ குஜராத்துக்கே யாத்திரை போயிருக்கிறாராம் ஓ பன்னீர்செல்வம். அழைக்கச் சொன்னது மோடி தான் என்கிறது ‘அவாள்’ ஏடான ‘தினமலர்’. “ஓ, எனது சுயமரியாதைக்கே, இது சவால். முதல் அழைப்புப் பெற வேண்டியவன் இங்கே இருக்கிறேன்; அந்தப் பன்னீருக்கு மட்டும் மரியாதையா?” என்று குமுறுகிறதாம் எடப்பாடி பழனிச்சாமி வட்டாரம்.

பா.ஜ.க. போட்டியிட்டால் நாங்கள் எதிர்த்து நிற்க முடியாது. பா.ஜ.க.வைத்தான் ஆதரிப்போம். அது எங்கள் பிறவிக் கடமை என்கிறார், பன்னீர்செல்வம். கமலாயம் போய் கதவைத் தட்டி எங்களுக்கு கருணை காட்டுங்கள் என்கிறார் எடப்பாடி.

கடைசியில் பா.ஜ.க.வை போட்டியிட வைத்து இரண்டு பிரிவுகளும் பட்டுக் கம்பளம் விரித்து, ‘ஆரத்தி’ எடுக்கத் தயாராகி வருவதாகவும் பேச்சு அடிபடுகிறது. என்ன நடக்கப் போகிறதோ நமக்குத் தெரியாது.

“அம்மா இல்லாதது இவர்களுக்கெல்லாம் குளிர்விட்டுப் போச்சு” என்றார் நண்பர். அம்மா பா.ஜ.க.வின் நீட் தேர்வை நடத்த மறுத்தார்; பா.ஜ.க.வின் உதய் மின் திட்டத்தை ஏற்க மறுத்தர்; ஒருமைப்பட்டுக்குக் குழு கூட்டத்தில் தனக்கு உரிய நேரம் பேச அனுமதிக்காததைக் கண்டித்து மோடி முகத்தில் கரியைப் பூசி வெளிநடப்பு செய்தார்; பா.ஜ.க. கூட்டணியே வேண்டாம் என்று தனித்துப் போட்டியிட்டு அந்தத் தேர்தலில் வெற்றி வாகை சூடினர். ‘என்னைத் தூங்க விடாமல் செய்து விட்டார் ஜெயலலிதா’ என்று பா.ஜ.க. வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது வெளிப்படையாகவே புலம்ப வைத்தவர் அம்மா!

இப்போது எல்லாமே தலைக் கீழ் தான். அய்யோ மோடி என்ன நினைப்பாரோ? அமீத்ஷா என்ன நினைக்கிறாரோ? என்றெல்லாம் தொடை நடுங்கிக் கிடக்கிறது, ‘அம்மாவின்’ பெயரில் கட்சி நடத்தும் பா.ஜ.க. ‘பரம ரசிகர்கள்’ கழகம்!

ஈரோட்டில் தேசியக் கட்சி காங்கிரஸ் பேட்டியிடுவதல் மற்றொரு தேசிய கட்சி பா.ஜ.க. போட்டியிடுவது தானே சரி என்றார் நண்பர்.

என்னது, பா.ஜ.க. தேசிய கட்சியா? அது ‘பாசிச தேசியக் கட்சி’யப்பா; நடப்பது; மாநில சட்டமன்றத்துக்கான தேர்தல்; இங்கு எந்தத் தேசிய ‘புடலாங்காயும்’ தமிழ்நாடு பிரச்சினையைத்தான் பேச வேண்டும்! என்று பதில் கூறினேன். அ.இ.அ.தி.மு.க.வும் **அகில இந்திய** அண்ணா தி.மு.க.தானே. அதிலிருந்து அகில இந்தியாவை அகற்றி விடுவீர்களா?” என்று அடுத்தக் கேள்வியைக் கேட்டேன்.

இதற்கெல்லாம் ஓ.பி.எஸ். ‘கப்சிப்’ அமீத்ஷாவிடம் அல்லது குருஜி மயிலை ஆடிட்டரின் விளக்கம் பெற்று பதில் கூறுவார். மீண்டும் முதலமைச்சர் கனவில் மிதக்கும் எடப்பாடியைக் கேட்டார், ‘அதெல்லாம் எனக்குத் தெரியாது; பா.ஜ.க.வின் ஆதரவுக்காக கால்கடுக்கக் காத்திருக்கிறேன்’ என்பார். இவர்கள் புரட்சித் தலைவி அம்மாவின் ஆட்சியை அமைக்கப் போகிறார்களாம்! வாழ்க நாமம்!

**– கோடங்குடி மாரிமுத்து**

# 21 மொழிகளில் பெரியார் எழுத்து பேச்சுகள்; தமிழக முதல்வர் அறிவிப்பு

பன்னாட்டு புத்தகக் கண்காட்சி சென்னையில் மிகச் சிறப்பாக நடந்து முடிந்திருக்கிறது. நிறைவு விழாவில் 118 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. ஏராளமான நூல்கள், 365 நூல்கள் பிறமொழிகள் தமிழில் இருந்து மொழிபெயர்ப்பதற்கான ஒப்பந்தங்களாக அவை நடந்து முடிந்திருக்கின்றன.

நிறைவு விழாவில் பேசிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மகிழ்ச்சியான அறிவிப்பு ஒன்றை வெளியிட்டு இருக்கிறார். பெரியாருடைய எழுத்து, பேச்சுகள், இந்திய மொழிகளை உள்ளடக்கி 21 உலக மொழிகளில் மொழிப்பெயர்த்து வெளியிட தமிழக அரசு ஏற்பாடுகளைத் தொடங்கி இருக்கிறது என்ற அறிவிப்பை அவர் வெளியிட்டு இருக்கிறார். அதே உரையில் அவர் மற்றொரு செய்தியையும் குறிப்பிட்டு இருக்கிறார். பதிப்புத் துறையில் பெரிதும் வளராத காலத்திலேயே கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையையும், ஏங்கல்ஸ், லெனின் அம்பேத்கர் உள்ளிட்ட பல அறிஞர்களுடைய நூல்களையும் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டவர் தந்தை பெரியார். அந்த வகையில் முன்னோடிகளின் கனவை நிறைவேற்றும் காட்சிகளாக இந்த பன்னாட்டு புத்தகக் கண்காட்சி உள்ளது என்றும் அவர் பெருமையுடன் குறிப்பிட்டு இருக்கிறார்.

பெரியாருடைய சிந்தனைகள் நாடு முழுவதும், உலகம் முழுவதும் பரவ வேண்டும் என்பதற்காக, நீண்ட நெடிய சட்டப் போராட்டத்தை பெரியார் திராவிடர் கழகம் நடத்த வேண்டிய ஒரு சூழ்நிலை தமிழகத்தில் உருவானது. பெரியார் எழுத்து பேச்சுகளை தொகுத்து 28 தொகுதிகளாக பெரியார் திராவிட கழகம் வெளியிட்ட போது,அதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் வந்தன. குறிப்பாக பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனமே அந்த வழக்கை தொடர்ந்தது. முதலில் நீதிபதி சந்துரு அந்த வழக்கை விசாரித்து இந்தத் தொகுப்பை வெளியிடுவதற்கு தடை விதிக்க முடியாது, இடைக்கால தடை கிடையாது என்று அறிவித்தார். பிறகு இரண்டு நீதிபதிகள் அடங்கிய மேல்முறையீட்டுக்கு வழக்கு அப்பில் செய்யப்பட்டது.

இரண்டு நீதிபதிகளும் நீதிபதி சந்துருவின் தீர்ப்பையே உறுதி செய்தார்கள். தடைகள் நீக்கப்பட்டதற்கு பிறகு ஏராளமான நூல்கள் பெரியார் எழுத்துக்கள், பேச்சுக்கள், புத்தகங்களாக நாட்டு மக்களிடம் பல பதிப்பகங்களால் கொண்டு வரப்பட்டன. இன்றைக்கு அடுத்த கட்டமாக 21 உலக மொழிகளிலும் இந்திய மொழிகளிலும் பெரியார் நூல் வர இருக்கிறது என்பது அடுத்த கட்டமாக வந்திருக்கிற மகிழ்ச்சிக்குரிய செய்தி. பெரியாரிய சிந்தனைகள் உலகம் தழுவியவை. அவை உலகம் முழுவதும் பரப்பப்பட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கை எட்டி அடைவதற்கு தமிழ்நாட்டில் திராவிட மாடல் அரசு ஒன்று வரும் வரை நாம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டு இருக்கிறது. அந்த சாதனை போல மகுடத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தட்டிச்சென்று இருக்கிறார் .

பெரியாரியவாதிகள், சமூக மாற்றத்தை விரும்புகிற அனைத்து முற்போக்கு முற்போக்கு சக்திகளும், நிச்சயமாக இதை வரவேற்பார்கள், மகிழ்வார்கள்.

# கள்ளக்குறிச்சி மாவட்டக் கழக கலந்தாய்வுக் கூட்டம்

6.1.2023 மாலை 4 மணிக்கு சங்கராபுரம் வாசவி அரங்கில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது. மாநில, மாவட்ட, ஒன்றிய பொறுப்பாளர்களை மாவட்டத் தலைவர் மதியழகன் வரவேற்று பேசினார், மாவட்ட செயலாளர் க. இராமர், மாவட்ட அமைப்பாளர் கி. சாமிதுரை, சங்கை ஒன்றிய செயலாளர் அன்பு ரவி, ந. வெற்றிவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அதனைத் தொடர்ந்து கழகத்தின் அடுத்த கட்ட செயல்பாடுகள், கழகம் ஏற்படுத்திய நிகழ்வுகள் ஆகியவைகளைப் பற்றித் தோழர்கள் கருத்து பேசினார். தலைமை செயற்குழு உறுப்பினர் அய்யனார், க.ராமர் மு.நாகராஜ், கி.சாமிதுரை, மா.குமார், அன்பு ரவி, கார்மேகம், பெரியார் வெங்கட் ஆகியோர் உரையாற்றினர்.

தொடர்ந்து மாநிலப் பொறுப்பாளர்களான தலைமைச் செயற்குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம், பரப்புரைச் செயலாளர் பால் பிரபாகரன், அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, கழகப் பொருளாளர் துரைசாமி ஆகியோர் உரையாற்றினர்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி பல்வேறு உதாரணங்களைக் கொண்டு அமைப்பின் செயல்பாடுகள் இப்போது உள்ள அரசியல் சூழல்களுக்கு ஏற்றவாறு எப்படி இருக்க வேண்டும் என்று விளக்கி பேசினார். அன்பு நன்றி கூறினார். மாவட்ட துணைச் செயலாளராக ந. வெற்றிவேல் நியமிக்கப்பட்டார். கலந்தாய்வு கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

தூத்துக்குடி முன்னாள் மாவட்டத் தலைவர் பால்ராசு மற்றும் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் திருமகன் ஈவெரா மறைவுக்கு மாவட்ட கமிட்டி சார்பில் இரங்கல் தெரிவித்து கொள்கிறோம்.

கழகப் பொதுச் செயலாளரும், புரட்சி பெரியார் முழக்க ஆசிரியருமான விடுதலை இராசேந்திரன் எழுதிய 59 நூல்களையும் திராவிட முன்னேற்றக் கழக தலைமையிலான அரசு நாட்டுடைமையாக்கி உள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. அதற்காக கள்ளக்குறிச்சி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் தமிழ்நாடு அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதோடு விடுதலை இராசேந்திரனுக்கு பாராட்டுக்களையும். வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

# சிறைத் துறைக்கு மாணவர் கழகம் நூல் அன்பளிப்பு

சென்னை 46ஆவது புத்தகக் கண்காட்சியில் சிறைத் துறை சார்பில் நூல் அரங்கு அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பாக கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் எழுதிய “மரண தண்டனை ஒழிப்போம்” உள்ளிட்ட 30-க்கும் மேற்பட்ட நூல்கள் சிறைவாசிகளுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது. தோழர்கள் உதயகுமார், பிரவீன், வழக்கறிஞர் அன்பரசன், புகழ் பொன் வளவன் அருண், மகிழவன், விஷ்ணு, பிரசாந்த் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# வன்கொடுமை தடுப்புச் சட்டத்துக்கு ஆதரவான போராட்டம்: வழக்கு தொடரப்பட்ட கள்ளக்குறிச்சி தோழர்கள் விடுதலை

சமூக ஒடுக்குமுறைக்கு உள்ளாகிவரும் தாழ்த்தபட்ட பழங்குடியினருக்கு ஓரளவு பாதுகாப்பாக இருக்கும் வன்கொடுமை தடுப்புசட்டத்தை நீர்த்து போக செய்யும் வகையில் உச்சநீதிமன்றம் 2018ம் ஆண்டில் ஒரு வழக்கில் தீர்ப்பு வழங்கியது. இத்தீர்ப்பை அவசர அவசரமாக அமுல்படுதில் ஒன்றிய அரசு முனைப்பு காட்டியது. இதனை எதிர்த்து இந்தியா முழுவதும் தொடர்சியான நீடித்த போராட்டங்கள் நடைபெற்றன. பலமாநிலங்களில் துப்பாக்கி சூடு நடைபெற்று உயிர்ப் பலி ஏற்பட்டது. இதன் பின்னரே இத்தீர்ப்பை உச்சநீதிமன்றமே வாபஸ்பெற்றது.

தமிழகத்தில் இடதுசாரிகட்சிகளும், திராவிட இயக்கங்களும், தலித் அமைப்பு களும் ஒருங்கிணைந்து பல்வேறு வகையான போராட்டங்களை நடத்தினர்.

கள்ளகுறிச்சி மாவட்டத்தில் 9.4.2018 மற்றும் 2.7.2018 ஆகிய தேதிகளில் இரயில் மறியல் போராட்டம் நடைபெற்றது. சின்னசேலம் ரயில் நிலையத்தில் நடந்த போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது சேலம் இருப்புபாதை காவல்படை, ஆத்தூர் காவல்நிலையத்தில் 4 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

இந்த வழக்குகள் விழுப்புரம் நீதிதுறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது. வழக்குகளை தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் வழக்கறிஞர்கள், வி.ராஜா, எ.சங்கரன் ஆகியோர் எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி நடத்தி வந்தனர்.

கடந்த 3 ஆண்டுகளாக தொடர்ந்து விசாரணை நடைபெற்று வந்தநிலையில் 24.11.2022ல் மாலை 7 மணியளவில் தீர்ப்பு வழங்கபட்டது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாவட்டச் செயலாளர் த.ஏழுமலை. விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்டச் செயலாளர். மு.தமிழ்மாறன், திராவிடர் விடுதலை கழகம் மாவட்டச் செயலாளர் க.ராமர், அம்பேத்கர் மக்கள் இயக்கத்தின் மாவட்டத் தலைவர் அ.ப.பெரியசாமி, விசிக மாவட்ட துணைச் செயலாளர் சி.ராமமூர்த்தி, விசிக கருத்தியல் பரப்பு மாநில துணைச் செயலாளர் பா. பாசறை பாலு, விசிக இளஞ்சிறுத்தைகள் எழுச்சிப் பாசறை மாநில துணைச் செயலாளர் ச. பொன்னி வளவன் ஆகிய 7 பேரும் குற்றவாளிகள் இல்லை என வழக்கில் இருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்பட்டது. இத்தீர்ப்பு சமூக நீதி போராட்டத்தை மேலும் மேலும் முன்னெடுத்து உத்வேகம் அளிப்பதாகும். பொதுநல நோக்கதுடன் நீதிமன்றங்களையும் ஒரு போராட்ட களமாக மாற்றிவரும் தோழர்கள் வி. ராஜா, ஏ.சங்கரன் போன்ற வழக்கறிஞர்கள் அதிகமானோர் உருவாகும்போது வழக்குகளும் உறுதிமிக்க போராளிகளை உருவாக்கும்.

**செய்தி: க. ராமர், கள்ளகுறிச்சி மாவட்டக் கழகச் செயலாளர்**

# தமிழ் ‘தேவபாஷை’ அல்ல; மக்கள் மொழி

சு. வெங்கடேசன் எம்.பி (Su Venkatesan MP) எடுத்த வைத்த விவாதம் நம்மை சிலிர்க்க வைக்கிறது. மக்களவையில் சமஸ்கிருதப் பல்கலைக்கழகங்களின் மசோதா நேற்று தாக்கல் செய்யப்பட்டது. சு.வெங்கடேசன், CPI(M) சமஸ்கிருதத்தை விட மூத்த மொழி தமிழ் என வாதிட்டார்.

இந்த மசோதாவை முன்மொழிகிற பொழுது அமைச்சர் இந்திய மொழிகளுக் கெல்லாம் தாய்மொழியாகவும், உலக அறிவினுடைய ஆதாரமாகவும் சமஸ்கிருதத்தை முன்வைத்தார். “இதற்கு என்ன அறிவியல் ஆதாரம் இருக்கிறது?” என்ற கேள்வியை நான் இங்கே எழுப்ப விரும்புகிறேன். நாடாளுமன்றத்தில் அமைச்சர் அறிவியல் பூர்வமான ஆதாரங்களை முன்வைக்க வேண்டும் என்பதை மக்கள் விரும்புவார்கள்.

சமஸ்கிருதத்தினுடைய முதல் கல்வெட்டு ராஜஸ்தானத்தினுடைய அத்திப்பாரா விலும் குஜராத்தில் இருக்கிற ஜூனாகடிலும் கிடைத்துள்ளது. அந்த கல்வெட்டின் காலம் கிபி 1-ம் நூற்றாண்டு. ஆனால், தமிழ் மொழியில் முதல் கல்வெட்டு மதுரையில் மாங்குளத்திலும் தேனியில் புலிமான்கோம்பையிலும் கிடைத்திருக்கிறது? இந்தக் கல்வெட்டின் காலம் கிமு 6-ம் நூற்றாண்டு.

சமஸ்கிருத கல்வெட்டு கிடைத்ததற்கு 700 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்க் கல்வெட்டு கிடைத்திருக்கிறது. சொல்லுங்கள் எது மூத்த மொழி? உங்களை விட 700 ஆண்டு வயதானவர்கள் நாங்கள்.

இதுவரை, இந்தியாவிலே கிமு 6-ம் நூற்றாண்டில் தொடங்கி 18ஆம் நூற்றாண்டு வரை 60,000 தமிழ் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. ஆனால், சமஸ்கிருதக் கல்வெட்டுக்களின் எண்ணிக்கை வெறும் 4000 மட்டும் தான் என்பதை இந்த அவையிலே எடுத்துச் சொல்ல கடமைப்பட்டுருக்கிறேன்.

இங்கே மீண்டும் மீண்டும் பலர் சொல்கிறார்கள் சமஸ்கிருதம் தேவ பாஷை என்று! அது அவர்களின் நம்பிக்கை. நான் அதில் குறுக்கிடவில்லை, ஆனால் மிக முக்கியமாக இங்கே நாங்கள் சொல்லுவது தமிழ் தேவபாஷை அல்ல! இது மக்களின் மொழி என்பதுதான் எங்களின் பெருமை.

ஏன் தெரியுமா? ஒரு பெண்ணாவது சமஸ்கிருதப் புலவராக உதயமாகி இருக்கிறாரா? ஒரு பெண் எழுத்தாளர் கூட கிடையாது.

ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட தமிழ் இலக்கியத்தில் ஒருவரல்ல, இருவரல்ல 40-க்கும் மேற்பட்ட பெண் புலவர்களைக் கொண்ட ஒரே உலக மொழி தமிழ்!

சமஸ்கிருதம் எந்தக் காலத்திலும் மக்களின் புழங்கு மொழியாக இருந்ததில்லை. அது சடங்கியல் மொழி. ஆனால் தமிழ் அப்படியல்ல. அறியப்பட்ட வரலாற்றின்படி, மூவாயிரம் ஆண்டுகளாக தமிழ் மக்களின் மொழியாக இருக்கிறது. இன்றைக்கும் இலங்கையில், சிங்கப்பூரில், மலேசியாவில், மொரீசியஸில், கனடாவில் அரசினுடைய மொழியாக இருக்கிறது.

பூவுலகம் முழுக்க இருக்கிற பல நாடுகளில் இருக்கிற 10 கோடி தமிழர்களுடைய பாஷை என்று நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். அதேபோல தமிழினுடைய பெருமை அது ஒரு சமயச் சார்பற்ற மொழி. கீழடியில் 16,000 பொருட்கள் கிடைத்துள்ளன. அதில் ஒரு பொருள் கூட பெரும் மதங்களும் மத நிறுவனம் சார்ந்த பொருள் கிடையாது. ஆனால் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் எழுத்துகள் கிடைத்துள்ளன. கிமு 6ஆம் நூற்றாண்டில் பெரும் மதங்களும் பெரும் மதங்களுடைய கடவுள்களும் உருவாவதற்கு முன்பே செழித்தோங்கிய மொழியாக தமிழ் இருந்தது.

அதேபோல நம்முடைய நாடாளுமன்ற அமைச்சர் தலையிட்டு இந்த விவாதத்தை சமஸ்கிருதத்திற்கும் தமிழிற்கும் நடக்கின்ற ஒரு போட்டியாக, யுத்தமாக மாற்றாதீர்கள் என்று சொன்னார்.

நிச்சயம் நாங்கள் அப்படி மாற்ற விரும்பவில்லை. எங்களை விட 700 வருடம் இளைய ஒரு மொழிக்கு எதிராக நாங்கள் ஏன் சண்டை போடப் போகிறோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் சமஸ்கிருதம் தான் இந்திய பண்பாட்டின், அறிவின் அடையாளமாக, நீங்கள் மீண்டும் மீண்டும் முன்வைத்தால் அதை எதிர்க்கிற முதல் குரல் தமிழகத்தின் குரலாக இருக்கும்.

**– ‘தமிழ் திசை’**

# நீதிமன்றம் ஆர்.எஸ்.எஸ். பிடிக்குள் வருகிறது

# ஜனநாயகத்தை இராமராஜ்யமாக்குகிறார்கள்

**ஓய்வு பெற்ற நீதிபதி கோபால கவுடா**

*உச்சநீதிமன்ற நீதிபதிகள் தேர்வில் ஒன்றிய அரசுக்கே முழு அதிகாரம்; உச்சநீதிமன்ற 'கொலிஜியம்' குறுக்கிடக் கூடாது என்று ஒன்றிய அரசு மோதலை உருவக்கி வருகிறது. மத்திய சட்ட அமைச்சர் கிரன் ரிஜிஜூ டில்லி உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஆர்.எஸ்.சோதி அளித்த பேட்டியை தனக்கு சாதகமாக வெளியிட்டுள்ளார். நாடாளுமன்றமே அதிகார மிக்கது என்றும், உச்சநீதிமன்றம், நீதிபதிகள் நியமனங்களில் தலையிட முடியாது என்றும் அவர் பேசியிருந்தார். இதற்கிடையே உச்சநீதிமன்றத்தை ஆர்.எஸ்.எஸ். கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர ஒன்றிய அரசு 'ஜனநாயக்' நாட்டை 'இராமராஜ்யமாக்க' முயற்சிக் கிறது என்று ஒய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி கோபால கவுடா வெளிப்படையாகவே பேசி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார். அவரது உரையை சூழ்நிலை கருதி 'புரட்சிப் பெரியார் முழக்கம்' பதிவு செய்கிறது.*

இந்தியா ஒரு பாசிச நாடாக மாறி வருவதாகவும், 2014ஆம் ஆண்டுக்கு பிறகு உச்சநீதிமன்றம் தனது சுயத்தை இழந்து வருவதாகவும் ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி கோபால கவுடா குற்றம் சாட்டியுள்ளார். அயோத்தி வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பு, நாடு முழுவதும் உள்ள மசூதிகளை வலதுசாரிகள் உரிமை கோருவதற்கான கதவுகளை திறந்துவிட்டிருப்பதாகவும் அவர் விமர்சித்துள்ளார்.

நரேந்திர மோடி தலைமையிலான பாரதிய ஜனதா அரசு ஒன்றியத்தை ஆளத் தொடங்கியதில் இருந்தே அறிவிக்கப்படாத அவசர நிலை இந்தியாவில் இருப்பதாகவே செயல்பாடுகள் உள்ளன. எதிர்க் கட்சிகள் எந்த மாநிலத்தையும் ஆளவே இயலாத அளவுக்கு நெருக்கடி, தன்னாட்சி அதிகாரம் கொண்ட அரசு அமைப்பே இல்லை, நீதிமன்றங்கள், நீதிபதிகளின் பிடியும் அவர்களின் கைக்குள். அனைத்து துறைகளிலும் ஆர்.எஸ்.எஸ். சங்பரிவார் களைத் திணித்து, சகலத் துறைகளையும் பலவீனப் படுத்தி, இந்திய அரசியலமைப்பை ஒவ்வொரு செங்கல்லாக அல்ல, சுக்குநூறாக ஒரே அடியாக உடைத்து நொறுக்கி, பெயரளவிலாவது இருக்கும் சனநாயகம் என்ற சொல்லை அர்த்தமிழக்கச் செய்து, இராமராஜ்ஜியமாக இந்த நாட்டை மாற்றுவதற்காக முழு மூச்சாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆர்.எஸ்.எஸ். பாரதிய ஜனதாவின் பாசிசப் போக்கைக் கண்டித்தால் வழக்கு, எதிர்த்தால் சிறை... உச்சமாய் தபோல்கர், கவுரி லங்கேஷ், கல்புர்கி என படுகொலை செய்யப்பட்டவர்களின் பட்டியல்களும் ஏராளம். ஆனால் அடக்குமுறைகளை ஏவியோ, சி.பி.அய்., அமலாக்கத்துறை, என்.ஐ.ஏ. போன்ற அமைப்புகளை வைத்து மிரட்டியோ, துப்பாக்கி முனையிலோ ஒருபோதும் எதிர்க்குரல்களை ஒடுக்கி விட முடியாது என்பதை காலம் அவ்வப்போது உணர்த்திக் கொண்டேதான் இருக்கிறது. நாடாளு மன்றத் தேர்தல் நெருங்கிக் கொண்டே இருக்கும் வேளையில், பாரதிய ஜனதா ஆட்சியின் மீதான அதிருப்திகளும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.

அரசியல் கட்சிகள், சமூக செயற்பாட்டாளர்கள் என்ற வட்டத்தை தாண்டி, அதற்கு வெளியேயும் இத்தகைய எதிர்ப்புக் குரல்கள் எழத் தொடங்கி விட்டன. ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர்கள், ஒன்றிய அரசின் முன்னாள் பொருளாதார ஆலோசகர்கள், அரசு உயரதிகாரிகளாக இருந்த பலரும் பாரதிய ஜனதாவின் எதேச்சதிகாரப் போக்கை அம்பலப்படுத்தியுள்ளனர். இந்நிலையில் ஒன்றிய ஆட்சி குறித்தும், உச்சநீதிமன்றத்தின் அறம் தவறிய தீர்ப்புகள் குறித்தும் கர்நாடகாவை சேர்ந்த ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி கோபால கவுடா டெல்லியில் நடந்த நிகழ்ச்சியில் பேசியிருக்கும் கருத்துக்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

அனைத்திந்திய வழக்கறிஞர்கள் சங்கம், டெல்லி பத்திரிகையாளர் சங்கம், ஜனநாயக ஆசிரியர் முன்னணி ஆகிய அமைப்புகள் இணைந்து டெல்லி யில் ஜனவரி ஏழாம் தேதி அரசியலமைப்பைக் காப்போம், ஜனநாயகத்தைக் காப்போம் என்ற பெயரில் தேசிய மாநாட்டை நடத்தின. இந்த மாநாட்டில் கலந்துகொண்டு பேசிய கோபால கவுடா, 2014ஆம் ஆண்டுக்கு பிந்தைய உச்சநீதி மன்றத்தின் விசாரணைகள், தீர்ப்புகளை கடுமையாக விமர்சித்தார். பாபர் மசூதியை இடித்த இடத்தில் ராமர் கோயில் கட்ட ரஞ்சன் கோகாய் தலைமை யிலான உச்சநீதிமன்ற அமர்வு அனுமதி வழங்கி யதால், ஞானவாபி உள்ளிட்ட நாட்டின் பல்வேறு மசூதிகளை வலதுசாரிகள் உரிமை கோருவதற்கான கதவுகளை திறந்துவிடப்பட்டுள்ளதாக அவர் குற்றம் சாட்டினார். இதனால் சிறுபான்மை மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல்களையும் அவர் விவரித்தார்.

பண மதிப்பழிப்பு நடவடிக்கைக்கு எதிரான வழக்குகளில் அரசியலமைப்பு ஜனநாயகத்தை நிலைநிறுத்த ஒரே ஒரு நீதிபதிக்கு மட்டுமே தைரியமும் துணிவும் இருந்ததாகவும் அவர் கூறியுள்ளார். 5 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வில், 4 நீதிபதிகள் பணமதிப்பழிப்பு நடவடிக்கை செல்லும் என்று தீர்ப்பளித்தனர். நீதிபதி நாகரத்னா மட்டும் தனது தீர்ப்பில், "நாடாளு மன்றம் இல்லாமல் சனநாயகம் தழைத்தோங்க முடியாது. எனவே இதுபோன்ற முக்கிய முடிவுகள் எடுக்கும்போது நாடாளு மன்றத்தை ஒதுக்கி வைக்க முடியாது" எனக் குறிப்பிட்டார்.

## நமது நிலைப்பாடு

*அதிகாரம் கொலிஜியத்துக்கா ஒன்றிய ஆட்சிக்கா என்ற பிரச்னையில் நமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துகிறோம். 'சமூக நீதி – பார்ப்பனியம்' என்ற கண்ணோட்டத்திலிருந்து இந்தப் பிரச்சினையை இணைத்துப் பார்க்க வேண்டும். அதில் ஆட்சி எந்தப் பக்கம்? நீதிமன்றம் எந்தப் பக்கம் சார்ந்திருக்கிறது என்ற அடிப்படையிலேயே இன்றைய வரலாற்றுச் சூழலில் முடிவெடுக்க வேண்டும். பார்ப்பனிய ஒன்றிய ஆட்சி உச்சநீதி மன்றத்தை ஆர்.எஸ்.எஸ். கட்டுப்பாட்டில் கொண்டு வரும் முயற்சிகளைத் தொடங்கி விட்டது. இந்த நிலையில் உச்சநீதிமன்றத்தின் மீது நமக்கு விமர்சனம் இருந்தாலும் நாம் உச்சநீதிமன்றத்தின் நிலைப்பாடு களையே ஆதரிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இதுவே பெரியாரியல் தந்த வெளிச்சம் என்பதே நமது பார்வை.*

2014ஆம் ஆண்டுக்கு முன்பு முக்கிய வழக்குகளின் விசாரணையின்போது, "சி.பி.அய். ஒரு கூண்டில் அடைக்கப்பட்ட கிளி" என்ற கருத்துக்களை கூட உச்சநீதிமன்ற நீதிபதிகள் தயங்காமல் முன்வைத்தனர். இதனை சுட்டிக்காட்டிய கோபால கவுடா, அப்படியெல்லாம் ஆவேசமாக கருத்துக்கூறிய உச்சநீதிமன்றத்தின் இன்றைய நிலை எவ்வளவு பரிதாபமாக இருக்கிறது என்பதையும் உணர்த்து வதற்கு சில வழக்குகளை எடுத்துரைத்தார். லோயா வழக்கில் என்ன நடந்தது என்பதே வெளிச்சத்திற்கு வராமல் ஒளிக்கப்பட்ட இருள் சூழ்ந்த பக்கங்கள். பீமா கோரேகான் வழக்கில் சமூக செயற்பாட் டாளர்கள் குறிவைத்து கைது செய்யப்பட்டு ஆண்டுக்கணக்கில் சிறைப்படுத்தப் பட்டனர். பாதிரியார் ஸ்டேன் சுவாமி சிறையில் உடல் நலிந்து, உச்சநீதிமன்றத்தால் பிணைகூட வழங்கப் படாமல் அலைக்கழிக்கப்பட்டு உயிரிழந்த கொடுமை யும் நடந்தது. கைது செய்வதற்கான ஆவணங்கள் கூட போலியாக அவர்களின் கணினிகளில் திணிக்கப் பட்டவை என்ற விவரங்கள் எல்லாம் இப்போது வெட்ட வெளிச்சமாகியுள்ளன. ஆனால் குஜராத் கலவரத்தின்போது கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு ஆளான பில்கிஸ் பானு வழக்கில், குற்றவாளிகளை குஜராத் மாநில பாஜக அரசு நன்னடத்தை அடிப்படையில் தண்டனைக் காலம் முடியும் முன்னரே விடுவித்தது. இதனை நீதிமன்றங் களும் நியாயப்படுத்தின. ரஃபேல் வழக்கு, ஆதார் அட்டை வழக்கு, உயர்ஜாதி ஏழைகளுக்கான இட ஒதுக்கீடு வழக்கு என பல வழக்குகளில் உச்சநீதி மன்றத்தின் செயல்பாடுகள் மக்கள் மன்றத்தில் கடும் விமர்சனங்களுக்கு ஆளாகின. இவற்றையெல்லாம் பட்டியல் போட்டு அடுக்கிய கோபால கவுடா, 2014ஆம் ஆண்டுக்கு பிறகு உச்சநீதிமன்றம் தன் சுயத்தை இழந்து விட்டதையே இவை காட்டுவதாக சாடினார்.

ஜம்மு காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்தை பறித்து ஜம்மு, காஷ்மீர், லடாக் என 3 தனித்தனி பகுதிகளாக உடைத்து அமைதியை தொலைத்துவிட்டனர். தேர்தல் பத்திரங்கள் மூலம் பாஜக அடிக்கும் பகல் கொள்ளை, பணமதிப்பழிப்பு நடவடிக்கையால் சிறு, குறு தொழில்துறையினர், ஏழை- எளிய மக்களை அல்லலுற வைத்த கொடுமைகள் என 8 ஆண்டுகளில் பாரதிய ஜனதா கட்சி அரங்கேற்றிய அவலங்கள் குறித்தும் கோபால கவுடா கவலைகள் தெரிவித்தார். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை உள்ளடக்கியதே இந்திய அரசியலமைப்பு எனக் குறிப்பிட்ட அவர், ஜனநாயகத்தின் அனைத்து தூண்களும் தற்போது பிற்போக்குவாதிகளால் சூழப்பட்டிருப்பதாகவும், இந்துத்துவ பாசிச நாடாக இந்தியா மாறி வருவதாகவும் விமர்சித்தார். குடியுரிமை திருத்தச் சட்டம் அனைவருக்கும் சம உரிமையை வழங்கவில்லை என்பதே அதற்கு சரியான சான்று என்றும் அவர் கூறினார்.

மாநிலங்களுக்கான நிதி உரிமைகள் பறிக்கப் படுவது, ஆளுநர்களை வைத்து ஒன்றிய அரசு செய்யும் அடாவடி அரசியல், நவீன குலக்கல்வியாம் புதிய கல்விக்கொள்கை போன்றவை கூட்டாட்சித் தத்துவத்தை பாழ்படுத்துவதையும் கோபால கவுடா சுட்டிக்காட்டியுள்ளார். பாஜக ஆட்சியின் கீழ் தேர்தல் ஆணையம், ராணுவம், கணக்கு தணிக்கை யகம் போன்ற அரசு அமைப்புகளை ஒன்றிய அரசு கையாளும் விதம், ஊடகங்கள், பத்திரிகையாளர்கள் நடத்தப்படும் விதம் குறித்தும் கோபலா கவுடா அதிருப்தி தெரிவித்தார். பாசிச சக்திகளின் பிடியில் இந்த நாடு எப்படி சிதைந்து கொண்டிருக்கிறது என்பதை உணர்த்தும் விதமாகவே கோபால கவுடா வின் முழுப் பேச்சு அமைந்திருந்தது. இத்தகைய விமர்சனங்களால் அச்சுறுத்தல்கள் ஏற்படலாம், இந்துத்துவ பயங்கரவாத சக்திகளால் மிரட்டப்பட லாம் அல்லது அரசு நிறுவனங்களால் குறி வைக்கப் படலாம் என்ற அச்சம் இல்லாமல் உச்சநீதிமன்றத் தின் நீதிபதியாக இருந்த ஒருவரே இவ்வாறு துணிச்சலாக பேசியிருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் கோபால கவுடாவின் பேச்சை பெரும் பான்மையாக வெகுசன ஊடகங்கள் புறக்கணித்து இருட்டடிப்பு செய்திருக்கின்றன. அரசியல் கட்சிகள், சமூக இயக்கங்கள் என்ற எல்லைகளுக்கு அப்பாற் பட்டு ஒன்றிய ஆட்சியின் அவலங்கள், ஜனநாயகப் படுகொலைகளுக்கு எதிராக அனைத்து மட்டங் களில் இருந்தும் குரல்கள் எழ வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அத்தகைய குரல்களை எதைக் கொண்டும் ஒடுக்க முடியாது, எழுந்தே தீரும் என்பதை கோபால கவுடாவின் பேச்சு நமக்கு நம்பிக்கையூட்டுகிறது.

**- தமிழில் ர. பிரகாசு**

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 26.01.2023**

## சந்திரபோஸ் முடிவெய்தினார்



*தியாகி இமானுவேல் சேகரன் பேரவையின் பொதுச் செயலாளரும், ஐந்திணை மக்கள் கட்சியின் அரசியல் ஆலோசகருமாகிய அருமைத் தோழர் சந்திரபோஸ் 21.01.2023 அன்று சனிக்கிழமை உடல் நலக்குறைவால் மரணமடைந்தார் எனும் செய்தி மிகுந்த வருத்தமளிக்கிறது. தோழரின் மரணம், ஜாதி ஒழிப்புக் களத்தில் நிகழ்ந்துள்ள ஒரு பேரிழப்பாகும்.*

*ஜாதியப் பெருமைகளைப் பற்றி எந்த நிலையிலும் சிந்திக்காமல், ஜாதிய இழிவுகள், புறக்கணிப்புகள், வஞ்சனைகள், உரிமைப் பறிப்புகள் பற்றி தொடர்ச்சியாக எடுத்துரைத்து அவற்றுக்குத் தீர்வு காண பெரும் போராட்டங்களையும் முன்னெடுப்புகளையும் நடத்தி வந்த ஒரு முற்போக்கு சிந்தனைவாதியாகத் திகழ்ந்தவர்.*

*பட்டியல் இன மக்களுக்குள்ளேயே ஏற்றத் தாழ்வினையும் பிரிவினையையும் பலரும் பேசி வருகிற சூழலில், சந்திரபோஸ், தியாகி இமானுவேல்சேகரனைப் போலவே அனைத்து தரப்பினரையும் இணைத்துக் கொண்டு செயலாற்ற விரும்பியவர். தன் குடும்பத்து திருமண உறவுகளில் கூட அந்தப் பிரிவினைப் போக்கினை உடைத்துக் காட்டியவர் அவர். பல ஆண்டுகளாக தனது உடல் நலம் பாதிக்கப்பட்டு இருந்தாலும் அவருடைய பணிகளை அவர் குறைத்துக் கொண்டதில்லை.*

*அந்த சமத்துவ உரிமைப் போராளிக்கு திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக எங்கள் புகழ் வணக்கங்களையும், அவரை இழந்து வாடும் குடும்பத்தாருக்கும், பேரவை, கட்சித் தோழர்களுக்கும் ஆழ்ந்த இரங்கல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*கொளத்தூர் மணி*
*தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்*
*22.01.2023*

DATE OF PUBLICATION - EVERY THURSDAY   TAMIL WEEKLY   REG.NO.TN/CC(S)DN/459/22-24  LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM   REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# சென்னை – திருப்பூர் – மேட்டூரில் தமிழர் திருநாள் கொண்டாட்டங்கள்

*சென்னை – திருப்பூர் – மேட்டூரில் தமிழர் திருநாள் கொண்டாட்டங்கள் நடைபெற்றன.*

**திருவல்லிக்கேணி :** சென்னை திருவல்லிக்கேணி பகுதி திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில், தமிழர் திருநாள், பொங்கல் விழா நிகழ்வு, மக்கள் கலை விழாவாக ஜனவரி 13ஆம் தேதி மாலை 6 மணியளவில், வி.எம்.தெரு பெரியார் படிப்பகம் அருகில் நடைபெற்றது. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு பரிசளித்து வாழ்த்துரை வழங்கினார்.

மேலும், கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் மற்றும் திருச்செங்கோடு ஒன்றியக் குழு உறுப்பினர் (திமுக) முனைவர் ஏ. ரியா ஆகியோர் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றி பரிசுகளை வழங்கினார்கள். கழகத் தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர் நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கினார். மேலும், தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், சென்னை மாவட்டத் தலைவர் மா.வேழவேந்தன் ஆகியோரும் பரிசுகளை வழங்கினர்.

பறையிசை, சிலம்பாட்டம், கிராமிய பாடல்கள், கானா பாடல்கள் என கலை நிகழ்சிகளுடன் விழா சிறப்புடன் நடைபெற்றது. நிகழ்வில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் எழுதிய அதிகார வரம்புகளை மீறும் ஆளுநர்கள்” புத்தகத்தை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டார்.

சென்னை மாவட்டக் கழகம் சார்பில், புரட்சிப் பெரியார் முழக்கத்திற்கான சந்தா, கழகப் பொதுச் செயலாளரிடம் வழங்கப்பட்டது. திமுக சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றறசு, மேற்கு மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.என்.துரை, பகுதிச் செயலாளர் காமராஜ், வட்ட கழகச் செயலாளர்கள் லைனர் கே.பிரபு, க.வே மோகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**திருப்பூர் :** காலை முதல் மாலை வரை விளையாட்டுப் போட்டிகள் கலை நிகழ்ச்சிகள் என பெரும் திரளான பொதுமக்கள் குழந்தைகள் பங்கேற்புடன் மிகச் சிறப்பாக நடைபெற்றது. திருப்பூர் வீரபாண்டி பிரிவு பெரியார் படிப்பகம் அருகில் திருப்பூர் மாவட்ட திராவிடர் விடுதலை கழகத்தின் சார்பில் 13ஆவது ஆண்டாக தமிழ்ப் புத்தாண்டு மற்றும் பொங்கல் விழா 15.01.2023 ஞாயிறு அன்று நடைபெற்றது.

விழாவிற்கு திருப்பூர் திவிக தெற்குப் பகுதி அமைப்பாளர் ராமசாமி தலைமை தாங்கினார். விழாவின் முதல் நிகழ்வாக காலை 10.00 மணிக்கு கழகப் பொருளாளர் சு. துரைசாமி தலைமையில் த.மு.எ.க.ச. மாவட்டச் செயலாளர் குமார் பொதுமக்கள் குழந்தைகளுக்கு பொங்கல் வழங்கி விழாவினை தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து திவிக மாவட்டத் தலைவர் முகில் இராசு, மார்க்சிய பொதுவுடைமை கட்சி இரவி, காளியம்மாள் ஆகியோர் பொங்கல் வழங்கி சிறப்பித்தனர். அடுத்த நிகழ்வான சிறுவர், சிறுமியர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளை ஆடிட்டர் இரவி அவர்கள் தொடங்கி வைத்தார். அப்பகுதி வாழ் சிறுவர், சிறுமியர், ஆண்கள் பெண்கள் என திரளாக உற்சாகத்துடன் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டனர். மாலை சிறுவர், சிறுமியர் பங்கேற்ற திருக்குறள் ஒப்புவிக்கும் போட்டி, நடன நிகழ்சிகள் நடைபெற்றது.

திவிகமாநகர தலைவர் தனபால், மாநகர அமைப்பாளர் முத்து, வேலம்பாளையம் பொறுப்பாளர் மாரிமுத்து, அய்யப்பன், ராமு, லட்சுமணன், முட்டைக் கடை கணேசன் ஆகியோர் காலை முதல் மாலை வரை நடந்த நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து நெறிப்படுத்தினார்கள். இரவு 7.00 மணியளவில் பொங்கல் விழா குறித்தும் தமிழ்ப் புத்தாண்டு குறித்தும் கழகத் தோழர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் உரையாற்றினார்கள்.

கழக மாவட்டத் தலைவர் முகில் ராசு, திமுக மாநில மாணவரணி துணை அமைப்பாளர் வீரமணி ஜெயக்குமார், தமிழ்நாடு அறிவியல் மன்ற தலைவர் சிவகாமி, திவிக மாவட்ட அமைப்பாளர் சங்கீதா, இணையதள பொறுப்பாளர் பரிமளராசன், மாநில பொருளாளர் சு.துரைசாமி ஆகியோர் உரையாற்றினார்கள்.

நிறைவு நிகழ்வாக பரிசளிப்பு விழா ஆரம்பமானது. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு தமிழ் புத்தாண்டு குறித்தும் பொங்கல் விழா குறித்தும் உரையாற்றி கழகத்தின் அமைப்புச் செயலாளர் ஈரோடு ரத்தினசாமி விளையாட்டுப் போட்டிகள் திருக்குறள் ஒப்புவித்தல் கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு நிகழ்வினை துவங்கி வைத்தார்.

தொடர்ந்து கழகத் தோழர்கள் சிறப்பு அழைப்பாளர்கள் ஆகியோர் வெற்றி பெற்ற அனைவருக்கும் பரிசளித்தனர். முடிவில் கழகத் தோழர் ராசசிங்கம் நன்றியுரையாற்ற நிகழ்ச்சி நிறைவடைந்தது. இந்நிகழ்வில் தோழர்கள் சரசு, திலகவதி, சிரிஜா, இராமசாமி, மோகன், பல்லடம் பழனிச்சாமி, சண்முகம், எஸ்.கருப்புசாமி ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

தோழர்கள் முத்துலட்சுமி, நஜ்முனிசா, வசந்தி, கதிர் முகிலன், மாணவர் கழகத் தோழர் ஈழமாறன், முத்தமிழ், பெரியார் பிஞ்சுகள் யாழிசை, பிரபன்யா வெற்றிமாறன், தழல் சிறகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**மேட்டூர் :** 15.01.2023 ஞாயிறு காலை 10.00 மணியளவில் மேட்டூர் நகர திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக மேட்டூர் பெரியார் படிப்பகத்தில் தமிழ்ப் புத்தாண்டு மற்றும் பொங்கல் விழா மேட்டூர் நகரச் செயலாளர் சு.குமரப்பா தலைமையில் நடைபெற்றது.

மேட்டூர் நகர படிப்பகத்தில் பொங்கல் வைக்கப்பட்டுபடிப்பகத்தின் முன் பந்தல் போடப்பட்டு கரும்பு கட்டப்பட்டிருந்தது. பொதுமக்கள் 500க்கும் மேற்பட்டவர்களுக்கு பொங்கலும் கரும்பும் வழங்கப்பட்டது. நிகழ்வில் மேட்டூர் நகர தலைவர் செ. மார்ட்டின், மாவட்ட செயலாளர் சி.கோவிந்தராஜ் மற்றும் மேட்டூர் நகர தோழர்களும், பொது மக்களும் திரளாகக் கலந்து கொண்டனர்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்கள் மட்டுமே என்று கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.. தமிழர்களை எதிரிகளாக எண்ணியது சரியல்ல. தமிழர்களை எதிரிகளாக எண்ணும்படியான சூழல் உருவாக்கப்பட்டிருந்தது என்பதையும் மறந்துவிடக் கூடாது.

ஆரியர்கள் நமது வேர்களை அறுத்தெரிந்து கொண்டிருக்கின்றார்கள் கருநாடகத்தைப் பரிசோதனைக் கூடமாக மாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அவ்வளவு எளிதாக கருநாடகத்தைப் பரிசோதனைக் கூடமாக மாற்ற இயலாது. கன்னட சாகித்திய பரிஷத்தில் இருக்கும் புரோகிதர் தன்னை யாரும் அசைக்க முடியாது என்று கூறுகின்றார் ஆகையால் திராவிடர்கள் அமைப்பாக வேண்டும் என அறைகூவல் விடுத்தார். இம்மாநாட்டில் பேசிய ஏ.ஜி.கான் அவர்கள் ஒடுக்கப்பட்டவர்களின் சார்பாக எவ்வாறு போராட வேண்டும் என்பதை இசுலாம் கற்றுத் தந்துள்ளதாகக் கூறினார். மேலும் அரசியல் சாசனத்தை நடைமுறைப் படுத்தும் இடத்திற்கு என் மக்கள் செல்லவில்லையென்றால் அரசியல் சட்டம் தவாறாகப் பயன்படுத்தப்படும் என்று ‘பாபாசாகிப் அம்பேத்கர்’ கூறினார். அவர் கூறியது உண்மையாகியுள்ளது என்றும் கூறினார்.

இம்மாநாட்டில் பேசிய மற்றொரு இலக்கியவாதியான எல்.என்.முகுந்தராஜ் அவர்கள், எதிர்வரும் நாட்கள் நாம் தலை நிமிர்ந்து நடக்கும் நாட்களாகும். அது இன்று முதலே தொடங்கிவிட்டது என்று பெருமிதத்துடன் கூறினார்.

திராவிட பூமி வளங்கள் நிறைந்த பூமி. திருடர்கள் செல்வந்தர்களின் வீடுகளில்தான் கொள்ளையடிப்பார்கள். அதைப் போன்றே வடஇந்தியர்கள் தென்னிந்தியாவைச் சுரண்டுகின்றார்கள். இது இராமாயண காலத்திலிருந்தே ஆரம்பமாகிவிட்டது. இராமாயணத்தில் கிஷ்கிந்த்தே என்று கூறுவது இன்றைய பெல்லாரியையே யாகும். பெல்லாரிக்கு இராமன் வந்தது, இரும்பிற்காகத்தான். ஆங்கிலேயர்கள் திப்பு சுல்தானைக் கொன்றது கே.ஜி.எப் தங்கத்திற்காகத்தான் என்பதை விவரித்தார். வடஇந்தியர்கள் செய்யும் ஒடுக்குமுறைகள் இன்றைக்கும் நிற்கவில்லை.

நமது வரிப்பணம் அதிகளவில் மத்திய அரசுக்குச் சென்று கொண்டிருக்கின்றது. அதே சமயம் மத்திய அரசு நமக்கு எதுவும் செய்வதில்லை என தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். மேலும், குவெம்பு அவர்களின் சிந்தனைமுறை அனைத்தும் திராவிட உணர்வாக இருந்தது. கன்னட நாடு இரண்டு தர்மங்களைக் கொண்ட நாடு.

லிங்காயத்து தர்மம், குவெம்புவின் விசுவமானவ தர்மம் (உலக மனித மதம்) இந்த இரண்டு தர்மங்களும் உழைக்கும் மக்களின் சார்பான திராவிட உணர்வின் பாகம் என்று கூறினார்.

ஆர்டிஎஸ்-RDS துவக்கவிழாவில் பேசிய அக்னிஸ்ரீதர் அவர்கள், குழந்தைகள் எத்தகைய உணவை உண்ண வேண்டும் என மடாதிபதிகள் தீர்மானிக்கின்றார்கள். தற்சமயம் காய்கறி உணவு விவாதப் பொருளாகியுள்ளது. ஜெர்மனியின் சர்வாதிகாரியாக இருந்த இட்லர் காய்கறி உணவைத்தான் சாப்பிட்டான். அதுமட்டுமல்ல இந்தியாவில் அதிக எண்ணிக்கையில் கொலைகள் செய்தவன் ஒரு பிராமணன். அவன் மகாராஷ்ட்டிரத்தை சேர்ந்த ராமராகவன் என்பவன்தான் அவனும் காய்கறி உணவுதான் சாப்பிட்டான். அவன் சிறையிலும்’சந்தியா வந்தனம்’ செய்தான் அந்தப் பிராமணன்தான் பல ஏழை எளியவர்களைக் கொன்றழித்தான். இந்த விசயம் விவாதிக்கப்படவில்லை என்று தனது ஆக்ரோஷத்தை வெளிப்படுத்தினார். இன்னும் இரண்டு மூன்று வருடங்களில் முசுலீம் இளைஞர்களும் அவர்களின் குடும்பங்களும் அச்சத்தில் வாழும் சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கின்றது. கருநாடகத்தின் குறிப்பிட்ட சிலப் பகுதிகள் போதைப்பொருள்களின் இடங்களாக மாறியுள்ளன.

“இந்து நாமெல்லாம் ஒன்று” என்கின்றார்கள் இது உண்மையென்றால் இடஒதுக்கீடு எப்படி உருவானது? SC/ST மக்கள் மீது தாக்குதல்கள் ஏன் அதிகரித்து வருகின்றன? இவர்கள், இந்து , முசுலீம் என்று ஏன் கூறுகின்றார்கள்? திராவிடர்களைத் திசை திருப்பிடவே கூறுகின்றார்கள் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று கூறினார்.

நாம் திராவிடர்கள் ஒன்றிணைந்து பிராமணியத்தை முறியடித்து நாட்டைக் காப்பாற்ற வேண்டும் அந்த குறிகோளை நிறைவேற்றவே “ராஷ்ட்ரிய திராவிட சங்கம்” RDS தொடங்கப்பட்டுள்ளது என்று அறிவித்தார்.

ஆனால் நமது வரலாறு வேறு. DNA ஆய்வின்படி இந்தியாவின் பூர்வகுடிகள் ஆப்ரிக்கா கண்டத்தைச் சேர்நதவர்கள். மூன்று வகையாக இந்தியாவில் குடியேறினார்கள். பின்னர் இறுதியாக வந்தவர்களே ஆரியர்கள் என்றும் கூறினார். திராவிடர்களே இந்தியாவின் பூர்வகுடிகள் என்பதற்கு சிந்துசமவெளி நாகரிகம் சாட்சியாக இருக்கின்றது என்றும் கூறினார்.

கன்னடம் கன்னடம்; திராவிடம் திராவிடம்

திராவிடம் திராவிடம்; கன்னடம் கன்னடம்

- எனும் முழக்கங்களுடன் மாநாடு நிறைவுப்பெற்றது.

## கோவை இராமகிருட்டிணன் இணையர் வசந்தி முடிவெய்தினார்



தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கு. இராமகிருட்டிணன் அவர்களின் இணையர் வசந்தி (வயது 59) 20.01.2023 அன்று காலை 10 மணி அளவில் உடல்நலமின்றி இயற்கை எய்தினார்.

முடிவு செய்தி அறிந்த திராவிடர் விடுதலைக் கழக தலைவர் கொளத்தூர் மணி கழகப் பொருளாளர் துரைசாமி, தலைமைக் குழு உறுப்பினர் பன்னீர்செல்வம் மற்றும் சேலம், ஈரோடு, திருப்பூர், கோவை மாவட்ட பொறுப்பாளர்கள், தோழர்கள் கு. இராமகிருட்டிணன் மற்றும் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தனர்.

கு. இராமகிருட்டிணனின் நீண்ட கால பெரியார் பணிக்கு துணை நின்ற அம்மையாரது இறுதி வணக்க ஊர்வலம் 21.01.2023 காலை 10 மணியளவில் இராமகிருட்டிணன் இல்லத்தில் இருந்து அருகில் உள்ள மின்மயானத்தில் எரியூட்டப்பட்டது.

இறுதி ஊர்வலத்திலும் கழகத் தலைவர் மற்றும் மாவட்ட பொறுப்பாளர்கள், தோழர்கள், தோழமை நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. இராசா, அமைச்சர் வி. செந்தில் பாலாஜி மற்றும் கழகத் தோழர்கள், பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP   Posted: 27th January 2023

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN